# இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
# வெள்ளிக் கிழமை பிரசங்கம்
# 16 செப்டம்பர் 2016 / 14 துல்ஹஜ் 1437 ஹிஜிரி
# <u>சோதனைகளும் பொறுமையும்</u>

اَلْحَمْدُ لِلَّهِ الَّذِي أَرْسَلَ رَسُوْلَهُ بِالْهُدَى وَدِيْنِ الْحَقِّ بَشِيْرًا وَنَذِيْرًا
وَدَاعِيًا إِلَى اللَّهِ بِإِذْنِهِ وَسِرَاجًا مُنِيْرًا وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
وَصَفِيُّ اللَّهِ مِنْ خَلْقِهِ وَحَبِيْبُهُ إِمَامُ الأَنْبِيَاءِ وَسَيِّدُ الْمُرْسَلِيْنَ اَللَّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا.
أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللَّهِ اتَّقُوْا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ
مُسْلِمُوْنَ

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

பிரபஞ்சத்தின் அதிபதியாகிய அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதன் மூலமாகவும் அவன் தடை செய்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீது "தக்வா" (பக்தியை) ஏற்படுத்திக் கொள்வோமாக! நமது

நல்ல முயற்சிகளுக்கு இம்மையிலும் மறுமையிலும் நாம் நற்கூலி வழங்கப்படுவோமாக! ஆமீன்.

ஜமாஅத்தார்களே! கடந்த வாரப் பிரசங்கங்களில் நமது மார்க்கம் மிக முக்கியமாக வலியுறுத்தும் ஒரு பண்பைப் பற்றி விவாதிக்கப்பட்டது. அது தான் பொறுமை ஆகும். காரணம், ஒவ்வொருவரும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் சோதிக்கப்படுவார் என்பதில் சந்தேகமில்லை. "ஸப்ர்" (பொறுமையை) மிக ஆர்வத்துடன் கடைப்பிடிப்பவருக்கு மறுமையில் அல்லாஹ்வின் சொர்க்கத்தில் இடம் பிடிப்பது எளிதாகி விடும். எனவே, சோதனைகள் மற்றும் "ஸப்ர்" ருக்குப் பின்னணியில் உள்ள பொருளை அறிந்து கொள்வோமாக! இறைத்தூதர் முஹம்மது(ஸல்) நவின்றார்கள்:

عَجَبًا لأمرِ المؤمنِ إنَّ أمْرَه كُلَّهُ لهُ خيرٌ وليسَ ذلكَ لأحَدٍ إلا للمُؤْمنِ إنْ أصابتهُ سَرَّاءُ شَكَرَ فكانتْ خيرًا لهُ وإنْ أصابتهُ ضَرَّاءُ صَبرَ فكانتْ خيرًا لهُ.

பொருள்: "முஃமின்" (ஓரிறை நம்பிக்கையாளரின்) விஷயம் ஆச்சரியத்தைத் தருவதாக உள்ளது. அவரது அனைத்து விஷயங்களும் அவருக்கு நன்மையாக அமைந்து விடுகின்றன. இவ்வாறு அமைவது முஃமினுக்குத் தவிர வேறு யாருக்கும் அமையாது. முஃமினுக்கு சந்தோஷமான நிலை ஏற்பட்டால் அதற்காக அவர் நன்றி செலுத்துகிறார். அது அவருக்கு நன்மையாக அமைந்து விடுகிறது. அவருக்குத் தீங்கு ஏற்பட்டால்

பொறுமையைக் கடைப்பிடிக்கின்றார். அதுவும் அவருக்கு நன்மையாக அமைந்து விடுகின்றது. (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்)

மேற்கண்ட ஹதீதை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா தன் மீது நம்பிக்கை கொண்டவர்களுக்கு அதிகமான ஆற்றல்களை வழங்குகிறான் என நாம் புரிந்து கொள்ள முடிகிறது. காரணம், ஒரு ஓரிறை நம்பிக்கையாளராகிய மு:மின், அருட்கொடைகள் அல்லது பேராபத்துகள் போன்ற எவ்விதமான சோதனைகளைச் சந்தித்தாலும் அவற்றையும், அவற்றுக்குப் பின்னணியில் உள்ள "ஹிக்மத்" எனும் நுட்பமான விஷயத்தையும் அறிய முயலுகின்றார். ஒவ்வொரு "நி:மத்" அருட்கொடையை நாம் அடையும் போது அதற்காக நன்றி செலுத்த வேண்டும். அவ்வாறே, ஒவ்வொரு ஆபத்தையும் பொறுமையாக எதிர்கொள்ள வேண்டும். அதுதான் ஒரு "மு:மின்" உடைய நன்னடத்தை ஆகும்.

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

"ஸப்ர்" ரைப் பற்றி நாம் விவாதிக்கும் போது, வாழ்நாள் முழுவதும் பல சோதனைகளை எதிர்கொண்டு பொறுமையோடு இருந்தார்களே அவர்களின் வாழ்க்கையைப் பற்றி சிந்தித்துப் பார்ப்பது அவசியம் என்பதை நாம் மறுக்க முடியாது. பொறுமையை உச்சகட்டமாகக் கடைப்பிடித்தவர் என வரலாற்றில் கூறப்படுபவர்களில் ஒருவர், இறைத்தூதர் அய்யூப் (அலை) ஆவார்கள். அவர்களது உடல் முழுவதையும் பாதித்த நோயால் அவர்கள்

எவ்வாறு சோதிக்கப்பட்டார்கள் என்பதைத் திருக்குர்ஆனின் ”அல்-அன்பியா” எனும் அத்தியாயத்தின் 83-84 வரையிலான வசனங்களில் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா பின்வருமாறு கூறுகிறான்:

۞ وَأَيُّوبَ إِذْ نَادَىٰ رَبَّهُۥٓ أَنِّى مَسَّنِىَ ٱلضُّرُّ وَأَنتَ أَرْحَمُ ٱلرَّٰحِمِينَ ﴿٨٣﴾
فَٱسْتَجَبْنَا لَهُۥ فَكَشَفْنَا مَا بِهِۦ مِن ضُرٍّ ۖ وَءَاتَيْنَٰهُ أَهْلَهُۥ وَمِثْلَهُم
مَّعَهُمْ رَحْمَةً مِّنْ عِندِنَا وَذِكْرَىٰ لِلْعَٰبِدِينَ ﴿٨٤﴾

பொருள்: இன்னும், அய்யூப் தம் இறைவனிடம் “நிச்சயமாக என்னை (நோயினாலான) துன்பம் தீண்டியிருக்கிறது; (இறைவனே!) கிருபை செய்பவர்களிலெல்லாம் நீயே மிகக் கிருபை செய்பவனாக இருக்கின்றாய்” என்று பிரார்த்தித்த போது, நாம் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டோம்; அவருக்கு ஏற்பட்டிருந்த துன்பத்தையும் நீக்கி விட்டோம்; அவருடைய குடும்பத்தையும், பின்னும் அதைப் போன்ற ஒரு தொகையினரையும் (அவருக்குக் குடும்பமாகக்) கொடுத்தோம் - இது நம்மிடத்திலிருந்துள்ள கிருபையாகவும் ஆபிதீன்களுக்கு (வணங்குபவர் களுக்கு) நினைவூட்டுதலாகவும் இருக்கிறது.

ஜமாஅத்தார்களே!

சோதனைகள் மற்றும் ”ஸப்ர்” சம்பந்தமான உண்மையானப் பொருளை அறிந்து, பாடம் பெறுவதற்குச் சிறந்த முன்மாதிரியாக இறைத்தூதர் அய்யூப் (அலை) அவர்களின் வரலாறு உள்ளது. சிலவேளை, அல்லாஹ்

நம்மை சோதிக்கும் போது நம்மில் சிலர் மன வேதனையால் முனங்குகிறார்கள். பெருமூச்சு விடுகிறார்கள். சிலர், விதியைப் பழிப்பது போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள். சிலர், நாம் சோதிக்கப்படுவதற்குக் காரணம், தாம் அல்லாஹ்வினால் விரும்பப்படவில்லை; அல்லாஹ் நமது விஷயத்தில் திருப்தியாக இல்லை எனத் தவறாக நினைத்துக் கொள்கிறார்கள்.

ஜமாஅத்தார்களே! இறைத்தூதர்கள் கூட சோதிக்கப்பட்டார்கள் எனும் போது சாதாரண மக்களாகிய நாமும் சோதிக்கப்படாமலிருப்போமா? உண்மையில், இறைத்தூதர் அய்யூப் (அலை) அவர்களும் அவர்களின் குடும்பத்தார்களும் கடுமையான வியாதியால் சோதிக்கப்பட்டார்கள்.

ஒருமுறை, இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம்: "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மிகக் கடுமையாக சோதிக்கப்பட்டவர்கள் யார்?" எனக் கேட்கப்பட்ட போது, "இறைத்தூதர்கள் மிகக் கடுமையாக சோதிக்கப்பட்டார்கள். பின்பு அவர்களை அடுத்து சிறந்து விளங்கியவர்களும் பின்பு அவர்களை அடுத்து சிறந்து விளங்கியவர்களும் கடுமையாக சோதிக்கப்பட்டார்கள்" என இறைத்தூதர்(ஸல்) பதிலளித்தார்கள். ஒரு அடியார், அவரது ஓரிறை நம்பிக்கைக்குத் தக்கவாறு சோதிக்கப்படுவார். அவரது "ஈமான்" (ஓரிறை நம்பிக்கை) உறுதியாக இருந்தால், அதற்குத் தக்க அவருக்கு ஏற்படுத்தப்படும் சோதனைகளும் மிகக் கடுமையாக இருக்கும். அவரது "ஈமான்" பலஹீனமானதாக இருந்தால், அவரது ஈமானுக்குத் தக்கவாறு அவர் சோதிக்கப்படுவார். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் இப்னுமாஜா ரஹ்)

எனவே, நாம் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் சோதிக்கப்படும் போது, அல்லாஹ் நம்மை வெறுக்கின்றான் என நினைக்கக் கூடாது. காரணம், விஷயம் அதற்கு மாற்றமாக இருக்கலாம். சிலவேளை, ஒருவர் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் அதிகம் விரும்பப்படுபவராக இருந்த போதிலும், அவரும் அல்லாஹ்வினால் சோதிக்கப்படுவார். நமக்கு ஏற்படுத்தப்படும் சோதனைகள் நமது கடந்த காலப் பாவங்களுக்கு ”கஃப்ஃபாரா” வாக (பரிகாரமாக) அமையும்.

இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் நவின்ற பின்வரும் மற்றொரு ஹதீதை ஆய்வு செய்வோமாக!

எந்த ஒரு முஸ்லிமுக்கு எவ்விதத் தீங்கு ஏற்பட்டாலும், வறுமை, விபத்து, கவலை, நோய், வருத்தம் போன்ற எவை ஏற்பட்டாலும், ஏன், ஒரு முள் குத்தினாலும் கூட, அதன் காரணமாக அல்லாஹ் அவரது பாவங்களைப் போக்குகிறான். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்)

ஜமாஅத்தார்களே!

ஒரு முஃமினுக்கு அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் ஏற்படுத்தப்படும் சோதனைகளின் தத்துவத்தை நாம் அறிந்த பின், சோதனைகளின் போது நம்மில் நாம் ”ஸப்ர்” ரை எப்படி ஏற்படுத்திக் கொள்வது? சகிப்புத் தன்மையையும் விட்டுக் கொடுக்கும்

மனப்பான்மையையும் நம்மில் வளர்த்துக் கொள்வது எப்படி? எனும் கேள்வி இங்கு எழலாம்.

அதற்கான வழிமுறைகளை இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் ஒரு ஹதீதின் மூலம் பின்வருமாறு விளக்குகிறார்கள்:

(வசதி வாய்ப்புகளில், மற்ற அருட்கொடைகளில்) உன்னை விடக் குறைவாக உள்ளவர்களைப் பார்! உன்னை விட உயர்வாக உள்ளவர்களைப் பார்க்காதே! அதுதான் உனக்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கும். அல்லாஹ் உனக்கு வழங்கியுள்ள எந்த "நிஃமத்" (அருட்கொடையையும்) இகழ்வாக, தரக்குறைவாகக் கருத வேண்டாம். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்)

எனவே, ஜமாஅத்தார்களே! நாம் எதிர்கொள்ளும் சோதனைகள் நமது தாங்கும் சக்தியை விட மிகக் கடுமையாக உள்ளதே என நாம் உணர்ந்தால், இதை விட மிகப் பெரிய சோதனைகளால் சோதிக்கப்படுபவர்களை நாம் பார்க்க வேண்டும். அப்போது, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு அருளியுள்ள அருட்கொடைகளின் அருமையை உணர்ந்து, அவற்றுக்கு நன்றி தெரிவிப்பவர்களாக நாம் இருப்போம். நாம் எதிர்கொள்ளும் சோதனைகள் நமக்கு மிகப் பெரிய சுமையாகத் தெரிந்தாலும், அல்லாஹ் இன்னும் எத்தனையோ அருட்கொடைகளை நம்மீது தொடர்ந்து பொழிந்துக் கொண்டிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஜமாஅத்தார்களே!

நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு வகையான "ஸப்ர்" (பொறுமை) ஆகிறது, ஒவ்வொரு தனிநபரும் சமுதாயமும் தமது கனவுகளை, வெற்றிகளை அடைவதற்காக மேற்கொள்ள வேண்டிய "ஸப்ர்" மற்றும் சகிப்புத்தன்மை ஆகும். சோதனைகளை எதிர்கொள்ள எவ்வாறு "ஸப்ர்" அவசியமாகிறதோ, அவ்வாறே, இவ்வுலகம் அல்லது மறு உலகம் சம்பந்தமான நமது கனவுகள் மற்றும் நம்பிக்கைகளை அடைவதற்கும் "ஸப்ர்" அவசியமாகிறது.

இவ்வுலக வாழ்க்கையில், ஒருவர், "ஸப்ர்" இல்லாமல் தனது கனவுகளையோ அல்லது வாழ்க்கையின் நோக்கங்களையோ அடைந்து கொள்ள முடியாது. "ஸப்ர்" உள்ளவர் வெற்றிமிக்கவராக இருப்பார். "ஸப்ர்" இல்லாதவர் தோல்வியைத் தழுவுவார்.

பின்வரும் காட்சிகளில் கவனம் செலுத்துங்கள்! தனது விதைகள் வளர்வதில் பொறுமையை இழக்கும் ஒரு விவசாயி, தனது தொழிலின் பலனை அடைந்து கொள்ளமாட்டார். தனது படிப்பில் பொறுமையைக் கடைப்பிடித்து படிக்காத ஒரு மாணவர், சிறந்த முடிவுகளை, மதிப்பெண்களை அடைந்து கொள்ள மாட்டார். இவ்வாறு, பொறுமையின் மூலமாகவே மக்கள் இவ்வுலக வாழ்க்கையில் வெற்றியை அடைபவர்களாக உள்ளார்கள்.

பொறுமையைக் கடைப்பிடிப்பவர்கள், சிலவேளைகளில், வீழ்ச்சியைத் தழுவலாம்; எனினும், அந்த வீழ்ச்சியிலிருந்து மீண்டு, மீண்டும் முன்னேற்றம் காண்பதற்கு அவர்கள் அதிக நாட்கள் காத்திருக்க மாட்டார்கள். சிலவேளைகளில், அவர்கள் தவறுகள் செய்வார்கள்; எனினும்

அவற்றைச் சரி செய்து கொள்ளத் தயங்கமாட்டார்கள். சில சமயங்களில், அவர்களுக்கு வெட்டுக் காயங்கள் ஏற்படலாம்; எனினும், அவர்களின் காயங்களை வெகு விரைவில் குணப்படுத்த அவர்கள் கடின முயற்சி செய்வார்கள். அவர்கள் அடிக்கடி தோல்வியைத் தழுவலாம்; எனினும், தோல்வியிடம் சரணடைந்து விடமாட்டார்கள். இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் வாழ்க்கையில் சிந்தனை செய்யுங்கள்! இறை அழைப்புப் பணி செய்வதற்குப் பொருத்தமான இடத்தைத் தேடி, அங்கு குடிபெயர வேண்டுமென்ற நோக்கில், அவர்கள் ஆர்வத்துடன் தனது தூதைப் பரப்பிய போது, அதற்காக பல குலத்தாரின் தலைவர்களை அவர்கள் சந்தித்த போது, அவர்களில் சிலர், இறைத்தூதர்(ஸல்) அவர்களின் வேண்டுதலை ஏற்றுக் கொள்ளவில்லை. சிலர், தமது கோரிக்கைகளை நிறைவேற்றினால் ஒத்துழைப்பு தருவதாகக் கூறினார்கள். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் இவ்விதமாக பலவாறு முயற்சிகளைச் செய்தும், தான் விரும்பிய விளைவுகள் ஏற்படாத போதும் கூட, அவர்கள் தனது முயற்சிகளைக் கைவிடவில்லை. இறுதியில், அல்லாஹ்வின் திட்டப்படி, இன்று ”மதீனா” என்றழைக்கப்படும் ”யத்ரிப்” நகர மக்களை அவர்கள் சந்தித்தார்கள்.

”ஒவ்வொரு உயர்வுக்கும் இறக்கம் உள்ளது” என்ற மலாய் மொழியின் பழமொழிக் கொப்ப, ஒவ்வொரு கஷ்டத்துக்குப் பின்பு இலகு உண்டு என்பதையும் இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

நான், சற்று முன்பு உங்களுடன் பகிர்ந்து கொண்ட வரலாறு, வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்வது அல்லது வெற்றியை அடைய முயல்வது போன்ற அனைத்து விஷயங்களிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது. இங்கு வந்திருக்கும் உங்களில் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட கனவுகள் இருக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன். நம்மில் சிலர், தமது தொழில் அல்லது படிப்பில் வெற்றியை அடைய கனவு கண்டு கொண்டிருப்பார்களெனில், மற்றும் சிலர், தமது திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சியை அடைவதற்கான கனவுகளைக் கண்டு கொண்டிருக்கலாம்.

நமது விருப்பங்களும் கனவுகளும் எதுவாக இருப்பினும் அவற்றை ஆர்வத்துடனும் பொறுமையாகவும் அடைவதற்கான நமது முயற்சிகளை நாம் கைவிட்டு விடக் கூடாது. நாம் விரும்பியதை ஒரு நாள் நாம் அடைவோம் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள்! பொறுமையாக இருப்பவர்களுடன் அல்லாஹ் எப்போதும் இருக்கின்றான் என்பதை உறுதியாக நம்புங்கள்! அதே சமயம், நமது இம்மை, மறுமை வாழ்க்கையின் கனவுகளை அடைவதில் தமக்குப் பொறுமையை வழங்குமாறு அல்லாஹ்விடம் தொடர்ந்து துஆச் செய்வதையும் நாம் நிறுத்தி விடக் கூடாது. ஆமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.